சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண்.ஓ.எஸ்.109/2015

2018ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் DW.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சுயம்புசெல்வம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் கார்த்திகைசெல்வி | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>குறுக்கு விசாரணை (5, 6 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

21.12.2018 - பிராதைப் படித்துப்பார்த்தேன். அதன் விபரங்கள் தெரியும். சுப்பிரமணியத்தேவரின் உடன்பிறந்தவர் பேச்சியம்மாள் ஆவார். போஸ் என்பவர் சுப்பிரமணியதேவருடன் பிறந்தவர். சுப்பிரமணியதேவருக்கு சேகர், ஞானமணி, செல்லச்சாமி ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். பேச்சியம்மாள் உயிருடன் இருக்கிறார். போஸ் இறந்துவிட்டார். பிராதில் 17 இலக்க சொத்துக்கு வாதி பாகம் கோரியிருக்கிறார். அது தவிர்த்து வேறு 3 இலக்க சொத்துக்கள் உள்ளன. கதிரேசன், சீத்தாமணி அம்மாள், போதும்பொண்ணு ஆகியோர் மீது அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். அதன் பிராது நகல் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.15 ஆகும். வடபுறம் உள்ள 37 செண்ட் மட்டும் பாத்தியம் என்று வாதி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். நான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தென்புறம் உள்ள 37 செண்டுக்கு வழக்கு போட்டிருக்கிறேன் என்றால் அது கூட்டுறவு சங்கத்திற்கு உரியது. (சாட்சி பி.வா.சா.ஆ.15 ஆவணத்தை பார்வையிடுகிறார்.பின்னர் சாட்சியம் அளிக்கிறார்) பி.வா.சா.ஆ.15ல் உள்ள 37 செண்ட் என்று உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தென்புறம் உள்ளது 37 செண்ட் என்று சொல்லவில்லை. தென்புறம் உள்ள 37 செண்ட் எங்களுடைய பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதால் தான் என்னுடைய எதிர்வழக்குரையிலும் வாதியின் பிராதிலும்

சொல்லப்படவில்லை என்றால் எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வடபுறம் உள்ள 37 செண்ட் நிலம் என் தாத்தா சுப்பிரமணியதேவருக்கு தனித்த பாத்தியப்பட்டது என்று நான் கட்சி செய்கிறேன். பேச்சியம்மாள் பாகப்பிரிவினையில் கலந்து கொள்ளவில்லை. அவருக்கு பாகம் ஒதுக்கப்படவில்லை. 15ம் இலக்கத்தினுடைய மொத்த சொத்துமே 5, 6 பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்கு விபரம் தெரிந்தே வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u> (வாதி தரப்பில்)

வா.சா.ஆ.11 ஆவணம் என் கணவருக்கு நான் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அதில் எனக்கு பாகத்திற்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்று சொல்லப்படவில்லை. 12.01.2016 தேதியில் போஸ் என்பவர் இறப்பினை பதிவு செய்திருக்கிறோம் என்றால் சரிதான். வழக்கிற்கு பின்பாக அந்த ஆவணம் பெறப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு தான் வாரிசு சான்று பெற்றிருக்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 எங்கள் திருமணப்பத்திரிக்கை ஆகும். திருமண தேதி 24.05.1991 என்று உள்ளது. அதில் தெய்வத்திரு.போஸ் என்று போடவில்லை. ஆதார் அட்டைக்கு நான் தான் விபரம் சொன்னேன். பான் கார்டு விபரங்கள் நான் சொன்னவைதான். வா.சா.ஆ.11ல் உள்ள சொத்துக்கள் சுப்பிரமணியதேவருக்கு ஆதியில் பாத்தியப்பட்டவை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு கால அவகாசம் கேட்கப்பட்டது.